# காட்டுமன்னார்கோயில் பேரூராட்சி

## கடலூர் மாவட்டம்

## குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி விளம்பரம்

ந.க.எண்.அ1 / 16 / 2009 நாள் : 25.06.2009

1) காட்டுமன்னார்கோயில் பேரூராட்சி பகுதியில் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வேலையினை செய்து முடிப்பதற்கான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை இப்பேரூராட்சியில் பதிவு செய்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் **03.07.2009-** ம் தேதி **வெள்ளிக்கிழமை** பிற்பகல் 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும்.

2) ஒப்பந்தப்புள்ளிகளை காட்டுமன்னார்கோயில் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் முகவரிக்கு அனுப்பபடவேண்டும். உரையின்மீது எந்த வேலைக்கான ஒப்பந்தப்புள்ளிகள் என்பதை தெளிவாக குறிப்பிடவேண்டும்.

3) அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி வேலைக்குரிய டேவணித்தொகையினை அலுவலக நேரத்திற்குள் பேரூராட்சி அலுவலகத்தில் ரொக்கமாக செலுத்தி இரசீது பெற்று இரசீது நகல் ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்பப்படவேண்டும்.

4) ஒப்பந்தப்புள்ளிஅட்டவணை அடிப்படையில் கோரப்படுகிறது. எனவே, ஒப்பந்தப்புள்ளி நமூனாக்கள் பேரூராட்சி அலுவலகத்தில் **02.07.2009** ந்தேதி **வியாழக்கிழமை** பிற்பகல் 4.00 மணி வரை வழங்கப்படும். அதற்கான தொகை ஒவ்வொரு பணிக்கும் அதன் எதிரே கண்டுள்ள தொகையினை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

5) காலம் தவறி வரும் ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்த வைப்பு செலுத்தாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

6) மூடி முத்திரையிடப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7) பண வரம்பு உள்ளவர்களுக்கு மட்டுமே டேவணித்தொகையை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி கொடுக்க வேண்டும்.

8) பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர் முன்னிலையில் **03.07.2009-**ம் தேதி **வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30** மணிக்கு திறக்கப்பட்டு பதிவு செய்யப்படும்.

9) அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ஒப்பந்ததாரர்கள் இலாகா சம்மந்தப்பட்ட சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு வேலையினை செய்து முடிப்பதற்காக ரூ.20/– மதிப்புள்ள முத்திரைத்தாளில் எழுத்து மூலமாக வேலை உத்திரவு கிடைக்கப் பெற்ற 14–தினங்களுக்குள் ஒப்பந்தம் செய்து கொடுக்க வேண்டும்.

10) ஒப்பந்தம் செய்யப்பட்ட வேலையினை ஒப்பந்ததாரரே செய்து முடிக்க வேண்டும். கீழ் குத்தகைக்கு விடக்கூடாது.

11) வேலையினை அதன் எதிரே குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் செய்து முடிக்க வேண்டும். தவறினால் வைப்புத்தொகையினை பறிமுதல் செய்வதுடன் முன் அறிவிப்பு ஏதுமின்றி ஒப்பந்தம் ரத்து செய்யப்படும். அதனால் ஏற்படும் சகல நஷ்டங்களுக்கும் ஒப்பந்ததாரரே பொறுப்பாவார்.

12) நிர்வாக காரணங்களுக்காக ஒப்பந்தத்தை எந்த முன் அறிவிப்புமின்றி ஒத்திவைக்கவும், நீக்கிடவும் செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.

## பிற்படுத்தப்பட்ட பகுதிக்கான மான்ய நிதி திட்டம் 2007-2008

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு (லட்சத்தில்) | டேவணித் தொகை | ஒப்பந்தப் புள்ளி நமூனா கட்ட ணம் | பணியினை முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1. | புளியந்தோப்பு தெரு தார்சாலை அமைத்தல் | 3.65 | 3650/- | 780/- | **45–** நாட்கள் |
| 2. | அம்பேத்கார் நகர் தார்சாலை அமைத்தல் | 1.70 | 1700/- | 312/- | **60–**நாட்கள் |
| 3. | கம்பர் வீதி தார்சாலை அமைத்தல் | 3.60 | 3600/- | 780/- | **60–** நாட்கள் |
| 4. | கண்ணதாசன் தெரு தார்சாலை அமைத்தல் | 2.05 | 2050/- | 780/- | **60–** நாட்கள் |
| 5. | எம்.ஆர்.கே.வீதி தார்சாலை அமைத்தல் | 2.70 | 2700/- | 780/- | **60–** நாட்கள் |
| 6. | முல்லை தெரு  தார்சாலை அமைத்தல் | 4.15 | 4150/- | 780/- | **60–** நாட்கள் |
| 7. | காந்திவீதி தார்சாலை அமைத்தல் | 2.80 | 2800/- | 780/- | **60–** நாட்கள் |
| 8. | பேரரசிதெரு (பெரியகுளம் தென்கரை ) தார்சாலை அமைத்தல் | 2.00 | 2000/- | 312/- | **45–** நாட்கள் |
| **மொத்தம்** | | **22.65** | | | |

செயல் அலுவலர்
பேரூராட்சி அலுவலகம்
காட்டுமன்னார்கோயில்.

**பெறுதல் :** அனைத்து பதிவுப்பெற்ற ஒப்பந்ததாரர்கள் , பேரூராட்சி, காட்டுமன்னார்கோயில்.

**நகல் :** அலுவலக விளம்பரப்பலகை

**நகல் :** தலைவர், உபதலைவர், உறுப்பினர்கள், காட்டுமன்னார்கோயில் பேரூராட்சி.
**நகல் :** திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கடலூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
**நகல் :** உதவி இயக்குநர், பேரூராட்சிகள் கடலூர் மண்டலம், கடலூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்துனுப்பப்படுகிறது.
**நகல் :** உதவி செயற்பொறியாளர், பேரூராட்சி பணிகள், உதவி இயக்குநர் அலுவலகம், கடலூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
**நகல் :** இளநிலை பொறியாளர், பேரூராட்சி பணிகள், அண்ணாமலைநகர் தகவலுக்காக.
**நகல் :** செயல் அலுவலர், பரங்கிப்பேட்டை, அண்ணாமலைநகர், வடலூர், சேத்தியாதோப்பு, புவனகிரி, கிள்ளை, லால்பேட்டை பேரூராட்சிகள் தகவலுக்காக.